[27th April 1962

Yarn

* 26 Q.—SRI S. K. SAMBANDHAN : Will the Hon the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal to control the quality of yarn produced for the use in the handloom industry ; and

(b) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) No, Sir

(b) Does not arise.

SRI S. K. SAMBANDHAN : தலைவர் அவர்களே, தரமான துணி உற்பத்தி செய்வதற்கு தரமான நூல் வேண்டுமென்று அரசாங்கம் உணருகிறதா ? அப்படி உணர்ந்தால், தரக் கட்டுப்பாடு அவசியம் என்பதை உடனடியாகக் கொண்டுவரவேண்டுமென்பதையும் அரசாங்கம் உணருகிறதா, என்பதை அமைச்சர் அவர்கள் சொல்வார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : தரமான துணி உற்பத்தியாக வேண்டுமென்பதை சர்க்கார் முழுமனதுடன் வரவேற்கிறது. தரமான துணி உற்பத்தி செய்வதற்கு தரக் கட்டுப்பாடு என்று சொன்னால் எந்தவிதமான கட்டுப்பாடு என்று நாம் ஆலோசனை செய்யவேண்டும். சர்க்கார் நியமித்திருக்கிற தரநிர்ணய இலாகா இருக்கிறது. அதிலே ஸ்டாம்பு பெற்றால் தான் அது தரமான துணி என்று தெரியும். அந்தவிதமான கட்டுப்பாடுகள் சர்க்கார் செய்ய தயாராக இருக்கிறது. வேறு கட்டுப்பாடுகள் இப்போது துணி சம்பந்தமாக, நூல் சம்பந்தமாக கிடையாது.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்களுக்கு மிகுதியாகத் தேவைப்படுகிற நூல்களின் ரகங்களை மட்டும் அதிகமாக உற்பத்தி செய்வதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்கிறதா ? எந்த வகையான நூலாக இருந்தாலும், பொதுவாக உற்பத்தி செய்யப்படுகிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த உற்பத்தியெல்லாம் தனியார்துறையில் நடக்கிறது. மார்க்கெட்டில் எதை நன்றாக விற்கமுடியுமோ, அது உற்பத்தி செய்யப்படுகிறது. நம் ராஜ்யத்தில் 136 மில்கள் இருக்கின்றன. போதுமான நூல் உற்பத்தி அதன் மூலம் நடக்கிறது என்று சர்க்கார் கருதுகிறது.

SRI S. K. SAMBANDHAN : தற்பொழுது நமது மாநிலத்தில் நூற்கப்படும் பெரும்பாலான நூல்கள் தரக்குறைவாக இருக்கின்றன என்பதால் அமைச்சர் அவர்கள் சொன்ன அந்தக் கட்டுப்பாட்டை உடனடியாகக் கொண்டுவர அரசாங்கம் முயற்சிக்குமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : நம்முடைய ராஜ்யத்தில் உற்பத்தி ஆகிற நூல் தரக்குறைவாக இருக்கிறது என்பதை நான் ஒத்துக்கொள்ளமுடியாது. அந்த விதமான தரக்குறைவான நூல் எந்த மில்லிலாவது உற்பத்தி செய்தால், கனம் அங்கத்தினரைப் போன்ற பெரிய வியாபாரிகள் அதை வாங்கவேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRI S. K. SAMBANDHAN : நூல் சரிவரக் கிடைக்காமல் இருப்பதால், சாதாரண நெசவாளிகள் எந்த நூல் கிடைத்தாலும் போதுமென்று வாங்கிக்கொண்டு மிகவும் கஷ்டப் படுகிறார்கள் என்பது அமைச்சருக்குத் தெரியுமா ? இங்கு உற்பத்தி செய்யப்படும் நூல் பலவற்றின் தரம் குறைவாக இருப்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அப்படித் தெரிந்து இருந்தும்தான் இப்படி பதில் சொல்கிறார்களா என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினருக்கு "சைகாலஜி" நன்றாகத் தெரியும் என்று நினைக்கிறேன். எனக்குத் தெரியும் என்பது அவருக்கு நன்றாகத் தெரிந்திருக்கிறது.